**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு ஜுலை திங்கள் 6 -ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திரு.நாராயணமூர்த்தி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், இளநிலை உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திரு.நாராயணமூர்த்தி, |
| வயது | - | |
| தந்தை/கணவர் பெயர் | - | த.பெ.வரதராஜ் |
| கிராமம் | - | கிளார் |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

06.07.2023
**வா.சா.3.**
**11 மற்றும் 12ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

என் சொந்த ஊர் காஞ்சிபுரம் மாவட்டத்தை சாா்ந்த கிளார் கிராமம் தான். நான் பிறந்து வளர்ந்தது கிளார் கிராமத்தில்தான். எனக்கு 60 வயதிற்குள்தான் இருக்கும். நான் விவசாய தொழில் செய்து வருகிறேன். எனக்கு 1 ஏக்கர் நிலம் உள்ளது. அது தற்போது விற்பனை செய்துவிட்டேன். இந்த வழக்கின் வாதி வசந்தா, முனியம்மாள், ரேவதி, மலர்வண்ணன், சிலம்பரசன் ஆகிய 6 பேர் இவ்வழக்கின் வாதிகள். இவ்வழக்கில் 7 பேர் பிரதிவாதிகளாக உள்ளார்கள். மலர்வண்ணன், சிலம்பரசன், சந்திரசேகர், முனியம்மாள், பெருமாள், ரேவதி ஆகியோர்கள் பெயர்தான் எனக்கு தெரியும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் 14 ஏக்கர் அதன் சர்வே எண்கள், விஸ்தீரனங்கள் குறித்தும் எத்தனை அட்டவணைகளாக சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது.

2) வயலூரில்தான் தாவா சொத்துக்கள் உள்ளது. வயலூருக்கும், கிளாருக்கும் இடையில் சுமார் 25 கிலோ மீட்டர் இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. அவ்வளவு தூரம் இருக்காது. எனக்கும், வயலூருக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. வயலூரில் எனக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. ஆனால் என் அக்கா பெண்ணை வயலூரில் கொடுத்துள்ளோம் அடிக்கடி போகவர இருப்பேன். நான் என் அக்கா மகளை வயலூரில் பெண் கொடுத்துள்ளதாக இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் பாட்டி வீடு வயலூரில் உள்ளது. எனக்கு என் பாட்டியின் ஊர் வயலூர் என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3) தாவா சொத்து 14 ஏக்கர் நிலத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றும், யார் பெயரில் பட்டா இருந்தது என்றும் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. வாதி அனுபவித்து வருவதுதான் தெரியும். பொதுவாக ஒரு இடத்தை அனுபவிக்கும் நபர் பெயரில் வரி வழங்கப்படும் என்றால் சரிதான். வாதியின் நிலத்தை அனுபவிப்பதற்கு அவர் பெயரில் வரி வழங்கப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவாவில் 1வது பிரதிவாதி, 2ம் பிரதிவாதி, 10வது பிரதிவாதி யார் யார் என்று எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எற்கனவே தட்டச்சு செய்யப்பட்டு வைத்திருந்து நான் அதில் கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை. நான் வந்த பிறகுதான் சொல்லி தட்டச்சு செய்தார்கள்.

4) வாதியின் கணவர் பெயர் குப்பன் அவரது தகப்பனார் பெயர் ஐயாகண்ணு. அவருக்கு இருபெயர் உண்டு மற்றொரு பெயர் எனக்கு தெரியவில்லை. நான் ஐயாக்கண்ணை நேரடியாக பார்த்தது இல்லை. அவர் எந்த வருடம் இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஐயக்கண்ணுக்கு எத்தனை பிள்ளைகள் அவருக்கு என்ன சொத்துக்கள் இருந்தது என்று

எனக்கு நேரடியாக எனக்கு தெரியாது. ஐயாகண்ணு வாரிசுகளுக்கு யார் யாருக்கு என்ன என்ன பாகம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. குப்பனை எனக்கு நேரடியாக தெரியும். அவர் வயலூரில் இருந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது அவருக்கு 2வது திருமணம் செய்து வைத்தபோதுதான் இந்த விவரங்கள் தெரிந்துகொண்டேன். குப்பனுக்கு 2வது குழந்தை பிறந்தவுடன் கிளாருக்கு வந்துவிட்டார். அவர் அங்கு 5 வருடங்கள் இருந்தார். அதன்பின்னர் இறந்துவிட்டார்.

5) குப்பன் கிளாரில்தான் இறந்தார் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. வாதியின் வீடு என் வீட்டிற்கு 3வது வீடு. வாதி என் சொந்தம்தான். வாதி என் உறவினர் என்பதாலும், ஊரை சார்ந்தவர் என்பதாலும் வாதிக்கு பவ்வியப்பட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் யார் யாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. அனுபவத்தில் உள்ள விவரம்தான் எனக்கு தெரியும். வாதி எந்த சொத்திலும் அனுபவத்தில் இல்லை என்றும், நான் அனுபவத்தில் உள்ளதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு குறித்து எந்த விவரங்களும் தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(1, 4 முதல் 7 வரையான பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணைக்காக உணவு இடைவேளை பொருட்டு ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>சாட்சி சத்தியபிரமாணத்தின்பேரில் 1, 4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வரவில்லை. வாதி வசந்தா கேட்டுக்கொண்டதன்பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் பிறந்தது,

வளர்ந்தது எல்லாம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கிளார் கிராமத்தில்தான். நான் தாவா சொத்து சர்வே எண்கள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. தாவா கிராமத்திற்கு என் பாட்டி ஊர் என்பதால் வரபோக இருப்பேன் வாதி வீட்டில் நடக்கும் அன்றாட நிகழ்வுகள் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. வாதியின் கணவர் பெயர் குப்பன். என்னுடைய வயதில் 40 வயதுக்குமேல் இருப்பார். நான் குப்பனை பார்த்துள்ளேன். குப்பனுக்கு திருமணம் ஆனது எனக்கு தெரியும். முதல் திருமணத்தின்போது நான் இல்லை. 2வது திருமணத்தில்தான் நான் உடன் இருந்தேன்.

2) குப்பனின் முதல் மனைவி இறந்துவிட்டார். அவருக்கு குழந்தைகள் இருந்தது. எனவே வாதியை குப்பனுக்கு 2வது திருமணம் செய்துவைக்க பேசி திருமணம் செய்து வைத்தோம். வசந்தாவின் தகப்பனார் 2வது திருமணம் செய்து வைப்பதால் சொத்து ஆதரவு செய்யவேண்டும் என்று கேட்டார் என்றும், அதனால் வாதியின் மாமனார் தனது சொத்தை விற்பனை செய்தார் என்று சொன்னால் சொத்து ஆதரவு செய்து வைக்கவேண்டும் என்று வாதியின் தகப்பனார் கேட்டார். ஆனால் வாதியின் மாமனார் சொத்து எதையும் விற்பனை செய்யவில்லை. திருமணத்தின்போது வாதியின் மாமனார் சொத்துக்களை விற்பனை செய்தார் என்றும், சொத்துக்களை விற்பனை செய்தபோது வாதியும், குப்பனும் அந்த கிரைய பத்திரத்தில் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சொத்தை விற்பனை செய்யவில்லை. வாதி நான் சொல்வதுபோல் சொத்தை அனுபவிக்கவில்லை என்றும், அனுபவித்திருந்தால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கமாட்டார் என்று சொன்னால் சரியல்ல.

3) தாவா சொத்துக்கள் குறித்து வாதி ஏற்கனவே பாகம் பெற்றுக்கொண்டு கிளார் கிராமத்திற்கு சென்றுவிட்டதால் தாவா சொத்தில் வாதிக்கு எந்தவிதமான பாகமும் கோர

அருகதையில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் செய்யாறு தாலுக்காவில் வயலூர் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்துக்கள் உள்ள கிராமத்தைவிட்டு வாதியும் அவரது கணவர் குப்பனும் 20 வருடங்களுக்கு முன்பாகவே சென்று விட்டார்கள். தாவா சொத்துக்களில் நிலமும், வீட்டு மனையும் உள்ளது. செண்ட் சுமார் 20000/-ம் ரூபாயிக்கு விற்பனை செய்யப்படுகிறது. சொத்துக்களின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் சிப்காட் நிலங்களை கையகப்படுத்துவதாலும் சொத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதாலும் வாதிகள் பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க வேண்டி இத்தாவா தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர் அவர் பாகம்கேட்டுதான் தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்தவிதமான பாகமும் கிடையாது என்றும், ஆனால் நான் வாதிகளுக்கு பவ்வியப்பட்டு தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் உள்ளதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.